# IMHO

## International Medical Health Organization

## சர்வதேச மருத்துவ நல அமைப்பு

September 01, 2008 Volume 1, Issue 2


## இவ்விதழில்


அடிப்படை மருத்துவ சேவை வழங்கல் 1

புற்றுநோய்/மனநோய்/ சிறுவர் பராமரிப்பு 2

சிறுநீரக நோய்/ கல்வியும் பயிற்சியும்/ ஆய்வுகூட அபிவிருத்தி 3

அழிவுகால நிவாரணம்/ இதய சிகிச்சை/ போசாக்கின்மை 4


*அன்புடையீர்,*

*சர்வதேச மருத்துவ நல அமைப்பு உலகில் வாழும் ஏழை மக்களின் சுகாதார மேம்பாட்டுக்காக 2004 இல் அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது. நீங்கள் அறிந்து போல் இவ்வமைப்பின் அங்கத்துவம் மருத்துவம் சார்ந்தவர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. இதன் செயற்பாடுகளில் பல்வேறு சமூக, பொருளாதார, தொழில்சார் பின்னணிகளைக் கொண்டவர்கள் தமது ஆக்கபூர்வமான பங்களிப்புகளை வழங்கி வருகின்றனர்.*

*இவ்வமைப்பானது அமெரிக்காவிலும் கனடாவிலும் அவ்அவ் நாட்டு இறைவரிச் சேவைகளின் நன்கொடைவழங்கல் சட்டங்களின் கீழ் பதியப்பட்டுள்ளது. அமெரிக்காவில் இவ்வமைப்புக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு தனிநபர் வரிவிலக்கும் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்புக்கு நீங்கள் வழங்கும் நன்கொடையில் 2%க்கும் குறைவான தொகையே முகாமைத்துவ செலவாக இருக்கிறது. எனினும் இச்செலவுகளைக்கூட ஒருசில அங்கத்தினர் பொறுப்பேற்பதனால் நீங்கள் வழங்கும் நன்கொடைகள் 100% எம்மக்களைச் சென்றடைகின்றன.*

*2004 இல் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பின் செயற்பாடுகள் இவ்வளவு குறுகியகாலத்துக்குள் விரிவடைந்தமைக்கு உங்களைப்போன்ற நல்லுள்ளங்களே முற்று முழுதான நன்றிக்குரியவர்கள்! கீழே வழங்கப்பட்டுள்ள சிறிய குறிப்புகள் இவ்வமைப்பு இற்றைவரை போரினால் பாதிக்கப்பட்ட எம்மக்களுக்கும் மற்றும் பல்வேறு நாடுகளில் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வழங்கிய உதவிகளின் ஒரு பகுதியே!*







## அடிப்படை மருத்துவ சேவைகள்:

எமது அமைப்பு இதுவரை மூன்று அடிப்படை மருத்துவ சேவை நிலையங்களை அமைத்துள்ளது. இந்நிலையம் ஒன்றினை அமைக்க $70,000 செலவானதுடன் அவற்றின் தொடர்ந்த சேவையாற்றலுக்கு நோயாளி ஒருவருக்கு $1.00 மட்டுமே செலவாகிறது.

மேலும் யாழ்குடநாட்டிற்கு அண்மையாக உள்ள ஏழு தீவுகளான நெடுந்தீவு, ஊர்காவற்துறை, புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, காரைநகர், வேலணை/ மருதங்கேணி போன்ற இடங்களில் கடமையாற்றும் மருத்துவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு $100.00 ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு இப்பகுதிவாழ் வறிய மக்களுக்கு வைத்திய சேவை உறுதிப்படுத்தப்படுகிறது. இச்சேவை 2007 இல் இருந்து நடைமுறையில் இருக்கிறது. இதே போல் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கடமையாற்றும் 12 வைத்தியர்களுக்கு மாதம் $100.00 ஊக்கத்தொகையாக வழங்கிவருகிறோம்.

பருத்தித்துறை, தெல்லிப்பளை, சங்கானை, அச்சுவேலி, காரைநகர்,மானிப்பாய், சுழிபுரம், சண்டிலிப்பாய் மூளாய் , வட்டுக்கோட்டை , பன்னாகம் , சண்டிலிப்பாய் , சுழிபுரம், தொல்புரம், மாதகல், அராலி வடலியடைப்பு போன்ற கிராமங்களில் சுழற்சிமுறையில் நடமாடும் மருத்துவ சிகிச்சை நிலையங்களை நடாத்த தேவையான பண உதவிகளைச்செய்து வருகிறோம். இச்சேவையை நாடும் நோயாளி ஒருவருக்கு $.0.50 மட்டுமே செலவாகிறது! இச்சேவையினை சரியான முறையில் நடைபெறுவதை உறுதிப்படுத்த தேவையான உபகரணங்கள், நோயாளர் காவுவண்டி போன்றனவற்றையும் வழங்கியுள்ளோம். இந்நோயாளர் காவுவண்டியே ஊரடங்கு காலங்களில் அவசர மருத்துவ சேவைக்காக பாவிக்கப்படுகிறது.இந்நடமாடும் மருத்துவ சேவையை மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கும் விரிவடையச் செய்துள்ளோம். இதில் மன்னாரின் அடிப்படை மருத்துவ வசதிகளுக்கு இவ்வருடத்தில் மட்டும் $12,000ம் வழங்கி இருக்கிறோம்.

## மருந்துப்பொருட்கள்:

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு அவசரகாலங்களில், குறிப்பாக A9 பாதை மூடப்பட்ட பின்னர் ஏற்பட்ட மருந்துப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இதுவரை $100,000.00 வழங்கப்பட்டுள்ளது..

## புற்றுநோய்ச் சிகிச்சை:

முழு இலங்கையிலுமே யாழ்மாவட்ட மக்களே புற்றுநோயால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களாயுள்ளனர் கடந்த நான்கு வருடங்களாக வடமாகாணத்தில் இயங்கும் ஒரேயொரு புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்துக்குத் தேவையான மருந்துப் பற்றாக்குறை நிவர்த்தி, வைத்தியர் பயிற்சி , ஏழை நோயாளர்களின் உணவுத்தேவை, போக்குவரத்துவசதி போன்றவற்றை நிவர்த்தி செய்ய எம்மாலான உதவிகளை செய்து கொண்டிருக்கிறோம். கடந்த வருடத்தில் மட்டும் இச்சேவைகளுக்கு $14,000ம் இவ்வருத்தில் இதுவரை $24,000ம் செலவு செய்துள்ளோம். இதில் $17,000 இவ்வருடம் ஆனிமாதம் திறந்துவைக்கப்பட்ட வெளிநோயாளர் பிரிவுக்கு செலவிடப்பட்டுள்ளது. இதைவிட இன்னோர் $25,000 இந்நோயாளிகளின் அவசரத்தேவைக்ளைப் பூர்த்தி செய்ய ஒதுக்கப்பட்டுள்ளது.



## மனநோய்ச் சிகிச்சை:

போரின் மிகப்பெரிய பக்க விளைவுகளில் ஒன்று மனவளப்பாதிப்பு. இதனைக் கருத்திற்கொண்டு மனநோய்ச் சிகிச்சைக்கு வருடம் ஒன்றுக்கு $3000 — $6000 தெல்லிப்பளை மனநோய் வைத்தியசாலைக்கு வழங்கப்படுகிறது.

யாழ்ப்பாணம்,வுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு சுனாமி காலத்தில் மனநோய் சிகிச்சைப் பயிற்சியாளர் சேவைப்பயிற்சிக்காக $5000 ம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நடமாடும் மனநோய் மருத்துவ சேவைக்காக் மாதம் $2800ம் வழங்கி வருகிறோம். வுனியாவில் $43,000 செலவில் முதலாவது மனநோய்ச்சிகிச்சைக்கான உள்-நோயாளர் பிரிவு ஒன்றை ஆரம்பித்து அது இன்னும் ஒரு வாரத்தில் திறக்கப்பட இருக்கிறது. இச்சேவையால் வுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மக்கள் அனைவரும் பயனடைவர்.



## வெற்றிமனை:

.நீடித்த மனநோயால் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற பெண்களின் கவனிப்புக்கு வெற்றிமனை ஆற்றிவரும் பணிக்கு மாதம் $5000 வழங்கிவருகிறோம்

## சிறுவர் பராமரிப்பு:

உடல்/உள ரீதியாக பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக முற்றிலும் இலவசமாக நடாத்தப்படும் God's own Children நிறுவனத்துக்கு வருடத்துக்கு $20,000 வழங்கி வருகிறோம். இப்பணம் இச்சிறுவர்களின் காலை, மதிய உணவுத்தேவைகளைப்பூர்த்தி செய்ய பயன்படுகிறது. அத்துடன் திருநெல்வேலியில் இயங்கும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால் நடாத்தப்படும் ஆதரவற்ற சிறுவர் பராமரிப்புக்கு இவ்வருடம் $7,300 வழங்கப்பட்டுள்ளது.

## கிழக்கிலங்கைக்கான விசேட கவனிப்பு:

சுனாமியில் 10,000 உயிர்களைக்காவுகொடுத்த கல்முனைப்பகுதிக்கு முதலாவது உள்-நோயாளர் மனநோய்ச் சிகிச்சைப்பிரிவை உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து கல்முனை மாவட்ட வைத்தியசாலையில் ஆரம்பித்தோம். அத்துடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மனநோய்ச் சிகிச்சைப்பிரிவில் துரித மருத்துவ சேவைக் குழுவொன்றையும் அங்கே சிகிச்சைக்காக வரும் உள்-நோயார்களுக்கான இலவச தொலைபேசிச் சேவையொன்றையும் ஆரம்பித்துள்ளோம்.இதற்காக $7,000 ம் வழங்கியுள்ளோம்.

இவ்வருடம் அவ் உள்-நோயாளர்பகுதி கூரையினை திருத்தி அமைக்க $12,000 வழங்கினோம். இவ்வைத்தியசாலையின் சிறுபிள்ளை வைத்தியப்பிரிவின் புனரமைப்புக்கு $5000ம் மருத்துவர்களின் பயிற்சி மேம்பாட்டிற்குத் தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கு $5000 வழங்கினோம்.

இப்பகுதியில் விதவைத் தாய்மாருக்கு வேலைவாய்ப்பையும் வருவாய்வழிவகை செய்யும் முகமாகவும் நுண்-கடனுதவியாக $36,000ம் வழங்கியுள்ளோம்.





## சிறுநீரக நோய்:

வடகிழக்குப்பகுதியில் அதிகரித்து வரும் சிறுநீரக நோய் சிகிச்சைக்காக இவ்வமைப்பு கடந்த இரண்டு வருடங்களில் கூடிய முனைப்புக் காட்டியுள்ளது. இதற்காக கிளிநொச்சி மாவட்டத்திலேயே முதன்முதலாக $37,000 பெறுமதியான இரத்தச்சுத்திகரிப்பு இயந்திரத்தை வழங்கி இதற்கான பிரிவொன்றை ஆரம்பித்துள்ளோம். ஏழைமக்களுக்கு இலவசமாக இச்சேவையை வழங்க வருடம் ஒன்றுக்கு $3000—6000 வழங்கப்படுகிறது.

யாழ்மாவட்டத்தில் ஏழைமக்களுக்கு இச்சேவைக்காக இதுவரை $6000ம் சிகிச்சைப்பிரிவின் நீர்சுத்திகரிப்பு இயந்திரத்துக்காக $11,000 ம் வழங்கப்பட்டுள்ளது.

## தனிப்பட்ட கொடையாளிகளின் முயற்சிகள்:

இவ்வமைப்புடன் கைகோர்த்து இயங்கும் சில கொடையாளிகள் சில திட்டங்களை முற்றுமுழுதாக தாமே பொறுப்பேற்று நடத்துவதற்கு இவ்வமைப்பு வழிகோல்கிறது. இத்திட்டத்தின் கீழ் அதிநவீன இரைப்பை-குடலியல் சிகிச்சைப்பிரிவும் , கண்-காது-மூக்கு சிகிச்சைப்பிரிவும், இதயநோய் சிகிச்சைப்பிரிவும் கொடையாளிகளினால நிறுவப்பட்டு செயற்படுகிறது.







## கல்வியும் பயிற்சியும்

வட-கிழக்கு மக்களின் சுகாதார நலன்களில் தொடர்ந்து சிறந்த சேவையாற்ற தேவையான சுகாதார அலுவலர்களை பயிற்றுவிப்பதற்கு இந்நிறுவனம் உதவி அளித்து வருகிறது. இதில் கிளிநொச்சி மாவட்ட தாதியர் தங்குமிடம் அமைக்க தேவைப்படும் $30,000 இல $15,000 ஏலவே அனுப்பப்பட்டு அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகின்றன. அத்துடன் கிளிநொச்சியில் அமைந்துள்ள சுகாதார விஞ்ஞான நிறுவகத்துக்கு $30,000ம் ஒதுக்கப்பட்டுள்ளது. யாழ் மருத்துவபீடத்துக்கும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கும் கல்வி மற்றும் பயிற்சி நிலையை உயர்த்த, மற்றும் உபகரணங்கள் பெற $12,000 வழங்கியுள்ளோம். யாழ்ப்பானத்தில் தாதியர், மருத்துவர் பயிற்சிக்கு $12,000ம் கிளிநொச்சி/வுனியாவுக்கு $5000ம் கொடுத்துள்ளோம். அத்தோடு $3600 செலவில் தொலைநிலை-மருத்துவ சேவை ஒன்றை யாழ் போதனாவைத்தியசாலையில் இவ்வருடம் ஆரம்பித்துள்ளோம்.








## நீரிழிவு நோய்:

வடமாகாணத்துக்கான முதலாவது நீரிழிவு நோய்ச்சிகிச்சை நிலையத்தை அமைக்க $70,000ம் அதன் வருடாந்த செலவுக்கு $4000ம் வழங்குவதாக உறுதியளித்துள்ளோம். இச்சேவையினால் வடமாகாணத்தில் உள்ள 5,00,000 பேர் பயனடைவர்.

## ஆய்வுகூட வசதிகள்:

எமது அமைப்பு $50,000ஐ இச்சேவைகளை நவீனமயப்படுத்த ஒதுக்கியுள்ளது. இத்தொகையில் $30,000 ஏலவே கொடுக்கப்பட்டு மீதி $20,000 மிகவிரைவில் அனுப்பப்பட உள்ளது. அத்துடன் கிளிநொச்சியில் இருந்து ஆய்வுகூட பரிசோதகர் ஒருவரை அமெரிக்காவுக்கு அழைத்துவந்து அவருக்கு ஆய்வுக்கூட கையாள்கையில் அதிநவீன பயிற்சியும் அளிக்கப்பட்டது.



## அழிவுகால நிவாரணம்:

### சுனாமி நிவாரணம்:

வாகனங்கள், நோயாளர் காவு வண்டிகள், மருந்துப்பொருட்கள், மற்றும் சுகாதாரம் பேணலுக்கான சாதனங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் எமது அமைப்பைச் சார்ந்த 250 பேர் வரை மருத்துவப்பணிகளில் நேரடியாக பங்கேற்றனர்.

எமது நிறுவனம் அதன் பெயரில் கொண்டிருப்பது போல ஈழத்தில் மட்டுமன்றி உலகமெங்கும் நடைபெறும் அழிவுகளினால் பாதிக்கப்படும் மக்களுக்கும் கைகொடுக்கிறது.

இவ்வகையில் அமெரிக்காவின் லூசியானா மாநில சூறாவழிக்கு $2000, பாகிஸ்தான் நிலநடுக்கத்துக்கு $4000, வங்கதேச வெள்ளப்பெருக்குக்கு $5000, பர்மா புயல் பாதிப்புக்கு $16,000 மற்றும் இலங்கையில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்குக்கு $5000ம் எமது அமைப்பு வழங்கியுள்ளது.

அத்துடன் 2007 இல் வவுனியா, மன்னார் பகுதியில் இடம்பெயர்ந்தோருக்காக $20,000 வழங்கினோம். ***கடந்த சில மாதங்களில் மட்டும் 200,000 பேர் வன்னிமாவட்டத்தில் இடம்பெயர்ந்துள்ளனர்.. இதற்காக நாம் ஏலவே $12,000 அனுப்பியுள்ளோம், தலைக்குமேல் கூரைகூட இல்லாமல் வாழும் இம்மக்களுக்கு உதவிட உங்கள் பங்களிப்பு மிக அவசியம் என்பது நாம் சொல்லாமலே புரியும்.***

## போசாக்கின்மை:

போரினால் பாதிக்கப்பட்டவர்களில் முக்கியமாக பெண்களும் குழந்தைகளும் கவனிப்பை இழந்துள்ளனர். இவர்களில் அரைவாசிக்குமேல் போசாக்கின்மையால் இவர்களில் 30% இனர் கடுமையான போசாக்கின்மையினால் பாதிக்கப்பட்டு இவர்களுக்கு பிறக்கும் குழந்தைகள் நலக்குறைவின்றிப்பிறப்பது மட்டுமல்லலாது தொடர்ச்சியான உடல்/உள வளர்ச்சியின்மைக்கும் உள்ளாகின்றனர். எமது அமைப்பு இத்தாய்மாரினதும் குழந்தைகளினதும் கவனிப்புக்காக விசேட திட்டமொன்றை இவ்வருடம் நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளது. இதில் முதற்கட்டமாக 1000 ஏழைத் தாய்மார் தேர்ந்தெடுக்கப்பட்ட்டு அவர்கள் ஒவ்வொருவருக்கும் அதிபுரத உணவு மற்றும் போசாக்கு மருந்துகள் போன்றன வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்துக்காக இதுவரை $125,000 அனுப்பப்பட்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது. இதன் வெற்றிக்கு கனடாவாழ் தமிழ்மக்களின் பாரிய பங்களிப்பை இங்கு நன்றியுடன் நினைவு கொள்கிறோம்



PHM advised to Mother






## இதயசிகிச்சைப்பிரிவு:

யாழ் வைத்தியசாலைக்கு வருடம் ஒன்றுக்கு மட்டும் 10,000 பேர் வரை இதய சிகிச்சைக்காக வருகின்றனர். இவர்களுக்கு சிறந்த மருத்துவ சிகிச்சை அளிக்க ஒரு முதல்தர சிகிச்சைப்பிரிவை நிர்மாணிக்க எண்ணியுள்ளோம்.



***இதற்காக $10,00,000 தேவைப்படுகிறது. இச்செலவில் $8,00,000 ஐ அமெரிக்காவாழ் மக்கள் வழங்குவர் என எதிர்பார்க்கிறோம். மீதி $2,00,000 ஐ கனடாவாழ் தமிழர்களிடம் எதிர்பார்த்து நிற்கிறோம்.*** அத்துடன் கிளிநொச்சிக்கு $87,000 பெறுமதியான இதயத்துடிப்பு வரைவு இயந்திரம் எம்மால் அனுப்பபட்டுள்ளதுடன் யாழ் போதனாவைத்திய சாலையில் இயங்கும் இதய சிகிச்சைப்பிரிவின் இரண்டாம்-நிலைப் பிரிவுக்கு $46,000ம் எம்மால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

***நாம் மேலே குறிப்பிட்டுள்ள திட்டங்களை தொடர்ந்து வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தவும் மேலும் புதிய திட்டங்களை அவதியுறும் எம்மக்களுக்காக ஆரம்பித்து நடைமுறைப்படுத்தவும் உங்களைப்போன்ற நல்லுள்ளங்களின் ஆதரவை நாடி நிற்கிறோம்!***

***எம்மால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் பற்றி மேலதிக விபரங்கள் அல்லது திட்டம் சம்பந்தமான ஆவணங்கள் வேண்டுவோர் எமது இணையத்தளமான*** www.imhousa.org ***இலோ அன்றி கீழே தரப்பட்டிருக்கும் முகவரிகளிலோ தொடர்பு கொள்ளலாம்.***

***நன்கொடைகளை அனுப்ப:***

**Treasurer**
**IMHO**
**P.O.Box 61265**
**Staten Island, NY 10306**
**USA**

***தொடர்புகளுக்கு:***

**IMHO**
**2381 Hylan Blvd, Ste # 13B**
**Staten Island, NY 10301**
**USA.**
**(718) 667-3535**

**OR**

**IMHO**
**P.O.Box 901**
**Bel Air**
**MD 210104-0901**
**USA**